# திருகோணமலை இந்துக் கல்லூரி - நிறுவன ஆவணப்படுத்தல்

## அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ்பேசும் சமூகங்கள் தொடர்பான எல்லா வகையான அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்திப் பாதுகாத்து இலவசமாகத் திறந்த வெளியில் அனைவரும் பயன்பெறும் வகையில் கிடைக்கச்செய்யும் முக்கிய பணியை மேற்கொள்ளும் இலாப நோக்கமற்ற நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.noolaham.media வழியாகவும் திறந்த வெளியில் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

## செயற்றிட்ட அறிமுகம்

கிழக்கிலங்கையின் திருகோணமலையில் அமைந்துள்ள ஆண்கள் தேசிய பாடசாலையாக திருகோணமலை இந்துக் கல்லூரி விளங்குகின்றது. இது 1897ல் திருகோணமலையில் இருந்து சில பெரியார்களால் இப் பாடசாலை நிறுவப்பட்டது. இப்பாடசாலை 1922 ஆம் ஆண்டு ஓர் ஆரம்பப் பாடசாலையாக அரசாங்கத்தினால் அதிகாரபூர்வமாகப் பதிவு செய்யப்பட்டது. இப்பாடசாலை ஆரம்ப காலத்தில் இந்து ஆண்கள் தமிழ்ப் பாடசாலை, இந்து ஆண்கள் ஆங்கில பாடசாலை என இரு பிரிவுகளாக ஒரே நிர்வாகத்தின் கீழ் இயங்கிக்கொண்டிருந்தது. 1925 ஜூன் 01 ஆம் திகதி வல்லிபுரம்பிள்ளை முதலியார் தலைமையில் இருந்த முகாமையாளர் சபை பாடசாலையை இராமகிருஷ்ண மடத்திற்குக் கையளிப்பதற்கு முடிவு செய்ததையடுத்து சுவாமி விபுலாநந்தர் பாடசாலை நிர்வாகத்தைப் பொறுப்பேற்றார். சுவாமி விபுலாநந்தரின் நேரடியான நிர்வாகத்தின் கீழ் இந்து ஆண்கள் ஆங்கிலப் பாடசாலையும், இந்து ஆண்கள் தமிழ்ப் பாடசாலையும் துரித வளர்ச்சியைக் கண்டன.

கால ஓட்டத்தில் இந்து ஆண்கள் ஆங்கிலப் பாடசாலை இந்துக் கல்லூரி என்ற பெயரோடு மாவட்டத்தின் முன்னணிக் கல்லூரியாக வளர்ச்சி பெற்று வர இந்து ஆண்கள் தமிழ்ப் பாடசாலை கோணேஸ்வர வித்தியாலயம் என்ற பெயரோடு ஆரம்ப இடைநிலைக் கல்வி மாவட்டத்தின் சிறந்த பாடசாலையாக உருவாகியது. இந்துக்கல்லூரியும், கோணேஸ்வரா வித்தியாலயமும் இராமகிருஷ்ண சங்கத்தின் ஒரே நிர்வாகத்தின் கீழ் 1961 ஆம் ஆண்டு மிசனரிப் பாடசாலைகளை அரசாங்கம் கையகப்படுத்திய போது இந்தப் பாடசாலைகளைத் தனித் தனியான இரு பாடசாலைகளாகவே இராமகிருஷ்ண மிஷன் அரசாங்கத்திற்குக் கையளித்தது. இவ்விரு பாடசாலைகளும் 1993 ஆம் ஆண்டு ஒரே பாடசாலையாக இராமகிருஷ்ண சங்கம் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி என்ற பெயரில் தேசிய பாடசாலை என்ற அந்தஸ்தையும் பெற்றுக் கொண்டது. திருக்கோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை முதலாவதாகவும் கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை இரண்டாவதாகவும் தேசிய பாடசாலையாகிய பெருமை இக் கல்லூரிக்கு உண்டு. குறிப்பாக இப் பாடசாலையின் ஆரம்பமும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட வளர்ச்சியையும், அவற்றுக்காக பாடுபட்ட ஆளுமைகளையும் கருத்தில் கொள்ள வேண்டியது மிக அவசியமாகும். எனவே, இச் செயற்றிட்டத்தின் மூலம் மிகவும் பழமை வாய்ந்த மற்றும் 127 ஆண்டு கால மிக நீண்ட வரலாற்றைக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த பாடசாலையை ஆவணப்படுத்துவதும், இந்த பாடசாலையின் ஆவணங்களை பாதுகாப்பதும் மிக முக்கியமாகும்.

## செயற்றிட்ட நோக்கம்

கிழக்கிலங்கையின் திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள பாடசாலையாக திருகோணமலை இந்துக் கல்லூரி திகழ்கின்றது. இச் செயற்றிட்டத்தின் மூலம் இப் பாடசாலை தொடர்பான அனைத்து விடயங்களையும் ஆவணப்படுத்தி பாதுகாத்து எதிர்கால சந்ததிக்கு கையளிக்கவும், திருகோணமலை இந்துக் கல்லூரி தொடர்பான அனைத்து அம்சங்களையும் இணையத்தளத்தில் திறந்த வெளியில் இலவசமாக அனைவரும் பார்த்து பயனடைந்து கொள்ளச்செய்வதும் இவ் ஆவணப்படுத்தலின் முக்கிய நோக்கமாகும்.

## செயற்றிட்ட அடைவுகள்

திருகோணமலை இந்துக் கல்லூரி தொடர்பான அனைத்து விடயங்களையும் கண்டறிந்து ஆவணப்படுத்துவதன் மூலம் பாடசாலையின் ஒட்டுமொத்த வரலாறும், பாடசாலையின் வரலாற்றோடு தொடர்புடைய ஆளுமைகளை அடையாளம் கண்டு அவர்களின் வாய்வழி வரலாறும் பதிவுசெய்யப்பட்டு ஆவணமாக்கி பாதுகாக்கப்படும். அத்தோடு, நூலக நிறுவனத்தினூடாக திருகோணமலை இந்துக் கல்லூரி தொடர்பான பூரணமான விடயத்தை இணையத்தளம் மூலமாக பார்வையிடுவதற்கான அணுகல் வசதி

அனைவருக்கும் இலவசமாக ஏற்படுத்திக்கு கொடுக்கப்படுவதோடு, அவை எதிர்கால சந்ததியிடம் பாதுகாப்பாக கொண்டு சேர்க்கப்படும்.

## செயற்றிட்ட காலவரையறை

இச் செயற்றிட்டமானது ஒரு வருட காலப்பகுதியைக் கொண்டுள்ளது. இக்காலப்பகுதிக்குள் பாடசாலை தொடர்பான வரலாறு, பாடசாலையால் ஆற்றப்பட்ட பணிகள் அப் பணிகளை இன்று வரை எடுத்துச் சென்று கொண்டிருக்கிற நபர்கள் பற்றிய வாய்மொழி வரலாறுகள், மற்றும் பாடசாலையில் பணியாற்றியோரது வாய்மொழி வரலாறுகள் என்பவை ஆவணப்படுத்தப்பட்டு இச்செயற்றிட்டத்தின் நோக்கம் பூரணப்படுத்தப்படும்

## எதிர்பாக்கப்படும் செலவீனம்

**LKR 5,476,332**

மேலதிக விபரங்களுக்கு
**https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132**